1982 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. தனியார் துறையினரும் உரிமங்கள் பெற்று கிராமங்களுக்கு மினி பஸ் விடும் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

மறைமலை நகரிலிருந்து நகரப் பேருந்து விடும் திட்டம்

*வினா எண். 17—திரு இ. கணேசன் மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னைக்கு அருகில் உருவாகிவரும் மறைமலை நகரிலிருந்து தாம்பரத்திற்கும், செங்கற்பட்டிற்கும் நகரப் பேருந்து விட அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் விடப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) :—மறைமலை நகர் மக்களின் வசதியை முன்னிட்டு தாம்பரத்தில் இருந்து சிங்கப்பெருமாள் கோயில் வரையிலும் மறைமலை நகர் வழியாக (தடம் எண் : டி. 32) ஒரு நகரப் பேருந்தும், செங்கற்பட்டிலிருந்து மாடம்பாக்கம் வரையில் மறைமலை நகர் வழியாக (தடம் டி. 11) ஒரு நகரப் பேருந்தும் நீண்ட நாட்களாக இயங்கி வருகின்றன.

மறைமலை நகர் மக்களின் தற்போதைய தேவையை முன்னிட்டு 1981-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5-ஆம் நாள் முதல் செங்கல்பட்டிலிருந்து தாம்பரம் வரையில் மறைமலை நகர் வழியாக (தடம் எண். டி. 60 கூடுதலாக இரண்டு நகரப் பேருந்துகள் விடப்பட்டுள்ளன.

மேற்கொண்டு தேவை ஏற்பட்டால் மறைமலை நகரிலிருந்து கூடுதல் பேருந்துகள் விடுவதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தனியார் லாரிகளில் வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்தும் திட்டம்

*வினா எண். 18—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தனியார் லாரிகளில் வேகக் கட்டுப்பாட்டுக் கருவி அமைக்க வேண்டும் என்று உத்தரவிடும் செயற் குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. : ஆம்.